


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 337 | 4 Pages | 3.7.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 337 | 4 பக்கங்கள் | 3.7.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**

**புல்லறி வாண்மை கடை**

**விளக்கம்:**
**நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.**

## அடுத்த தலாய் லாமாவை தேர்வு செய்ய அறக்கட்டளைக்கு அதிகாரம்

தர்மசாலா, ஜூலை 3



இந்தியாவின்அண்டை நாடானதிபெத், 1959ம் ஆண்டு முதல், சீனாவின் கட்டுப்பாட்டில் சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக, தற்போதைய தலாய் லாமா, சிறுவயதாக இருந்த போதே இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்து விட்டார்.

அவருடன் வந்த லட்சக்கணக்கான திபெத் மக்கள், இந்தியாவில் வசிக்கின்றனர். இவர்கள், திபெத் மீதான சீனாவின் ஆட்சியை ஏற்பதில்லை. தற்போது மத தலைவராக இருப்பவர் 14 வது தலாய்லாமா.

இவர் இந்த மாதம் வாரிசை அறிவிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் நேற்று அவர் வாரிசை தேர்வு செய்ய மறுப்பு தெரிவித்தார். அவர் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க திபெத் அறக்கட்டளைக்கு அதிகாரம் அளித்தார். இது குறித்து தலாய் லாமா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் 24ந் தேதியே புதிய தலாய் லாமாவை அங்கீகரிப்பதற்கான நடைமுறை குறித்து தெளிவாக விளக்கி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. புதிய தலாய் லாமாவை தேர்வு செய்யும் பொறுப்பு, தலாய் லாமாவின் அலுவலகமான கடென் போட்ராங் அறக்கட்டளையின் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அவர்கள் திபெத்திய புத்த மரபுகளின் பல்வேறு தலைவர்களை சந்தித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். இந்த விஷயத்தில் தலையிட வேறு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஹாசன் மாரடைப்பு உயிரிழப்பில் அரசியல்: பா.ஜனதாவுக்கு சித்தராமையா கண்டனம்



பெங்களூரு, ஜூலை 3

முதல்மந்திரி சித்தராமையா தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது:

கர்நாடகத்தில் இளம் வயது உடையவர்கள் திடீரென மாரடைப்பால் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இது ஆதங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இதற்கு காரணம் என்ன, கொரோனா தடுப்பூசி காரணமா என்பது குறித்து ஆய்வு செய்ய கடந்த பிப்ரவரி மாதமே மருத்துவ குழுவுக்கு உத்தரவிட்டோம். இது தொடர்பாக இதய நோயாளிகளை பரிசோதனைக்கு உட்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஒரு மாதத்தில் ஹாசன் மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்டோர் மாரடைப்பால் உயிரிழந்த விவகாரத்தை அரசு தீவிரமாக எடுத்து கொண்டுள்ளது. இதுகுறித்து ஆய்வு செய்ய நாங்கள் ஒரு மருத்துவ குழுவை அமைத்துள்ளோம். அந்த குழு 10 நாட்களில் அறிக்கை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளோம். சிறுவயதிலேயே இளைஞர்கள் உயிரிழப்பது என்பது எங்களுக்கு கவலை அளிப்பதாக உள்ளது. இந்த விஷயத்தில் கூட பா.ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அரசியல் செய்கின்றன. இதை நான் கண்டிக்கிறேன். மக்களை பாதுகாக்க எங்கள் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மாத்திரைகளை கொடுத்து பள்ளி மாணவனுடன் உல்லாசம்: 40 வயது ஆசிரியை செய்த லீலை

மும்பை, ஜூலை 3

மும்பையில் உள்ள பிரபல தனியார் பள்ளியில் திருமணமான 40 வயது ஆசிரியை, 16 வயது மாணவனுக்கு செய்த பாலியல் கொடுமைகள் வெளிவந்துள்ளன. அதாவது அந்த பள்ளியில் கடந்த 2023ம் ஆண்டு நடந்த நடன நிகழ்ச்சிகளின்போது, ஆசிரியைக்கு 9ம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. அந்த மாணவனுடன் ஆசிரியை நெருங்கி பழகி வந்துள்ளார். பின்னர் அவனிடம் ஆசிரியை அத்துமீறி ஆபாசமாக நடந்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவன், ஆசிரியையுடன் பேசுவதை நிறுத்தி உள்ளான்.

இதுபற்றி ஆசிரியை தனது தோழியிடம் கூறி புலம்பி உள்ளார். இதையடுத்து அந்த தோழி, மாணவனை சந்தித்து பேசியுள்ளார். வயதான பெண்களுக்கும், பதின்ம வயது சிறுவர்களுக்கும் இடையேயான உறவு தற்போது மிகவும் சாதாரணமாகிவிட்டது, இதெல்லாம் பெரிய விஷயம் இல்லை, நீ பேசாமல் இருப்பதால் ஆசிரியை மிகவும் மனஉளைச்சலில் இருக்கிறார், என்றெல்லாம் கூறி மாணவனின் மனதை அவர் மாற்றியுள்ளார். இதைத்தொடர்ந்து ஆசிரியையுடன் மாணவன் மீண்டும் பேசத்தொடங்கி உள்ளான்.

இந்தநிலையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆசிரியை, மாணவனை ஒரு சொகுசு ஓட்டலுக்கு அழைத்துச்சென்று அவனை பாலியல் ரீதியாக துன்புறுத்தி உள்ளார். இது மாணவனுக்கு கடுமையான பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதையடுத்து ஆசிரியை அவனது பதற்றத்தை போக்க சில மாத்திரைகள் கொடுத்துள்ளார். மாணவன் 10ம் வகுப்புக்கு சென்ற பிறகும் அவனை அடிக்கடி சொகுசு ஓட்டல் களுக்கு அழைத்து சென்று தனது லீலையை தொடர்ந்துள்ளார். உல்லாசத்திற்கு முன் மது அருந்திவிட்டு அவனிடம் அத்துமீறுவதையும் ஆசிரியை வாடிக்கையாக வைத்திருந்தார்.

இந்த புகாரின் பேரில் போலீசார் சம்பந்தப்பட்ட 40 வயது ஆசிரியை மீது பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் போக்சோ சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை அதிரடியாக கைது செய்தனர். மேலும் இந்த சம்பவத்துக்கு உடந்தையாக இருந்ததாக ஆசிரியையின் தோழி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. தன்னிடம் படிக்கும் மாணவனிடமே ஓராண்டுக்கும் மேலாக உல்லாச உறவு வைத்த பள்ளி ஆசிரியையால் பெரும் அதிர்வலை ஏற்பட்டுள்ளது.

# எவ்வளவு விமர்சனகள் வந்தாலும் மக்கள் பணி தொடரும் திருமண விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூலை 3



சமய அறநிலையத்துறை சார்பில் 32 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. சென்னை ஆர்.ஏ.புரத்தில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார். மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், திராவிட மாடல் ஆட்சியில் இந்துசமய அறநிலையத்துறை மகத்தான வளர்ச்சி அடைந்துள்ளது. பக்தர்கள் போற்றக்கூடிய அரசாக தொடர்ந்து சாதனை படைத்து வருகிறோம். திராவிட மாடல் ஆட்சியில் 3177 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி வைத்துள்ளோம். 7,000க்கு மேற்பட்ட ஏக்கர் கோயில் நிலங்களை மீட்டுள்ளோம். 2 லட்சத்துக்கும் மேற்பட்ட நிலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளது. 12,000 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் வசிக்கின்ற பகுதியில் 5000 கோயில்களுக்கு நிதி உதவி செய்துள்ளோம். மூத்த குடிமக்களை கட்டணமில்லாமல் ஆன்மிக பயணத்துக்கு அழைத்துச் சென்றுள்ளோம். 29 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியுள்ளோம். 41 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியுள்ளோம். அர்ச்சகர்களுக்கு புத்தாடைகள், பொங்கல் கருணை தொகை என ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். அறநிலையத்துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளில் 2,326 இணையர்களுக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்படி நாள் முழுக்க சொல்லிக்கோண்டே இருக்க முடியும். அந்த அளவுக்கு சாதனைகளை செய்துகொண்டே இருக்கிறோம். எல்லாருக்கும் எல்லாம் என்கிற நோக்கி திராவிட மாடம் அரசு செய்யும் சாதனைகளை, வெறுப்பையும் சமூகத்தில் பிளவுபடுத்தும் எண்ணங்களை கொண்டவர்களால் பார்த்து தாங்கிக் கொள்ள முடியவில்லை. பக்தியின் பெயரால் பகல்வேஷம் போடுவர்களால் திமுக அரசின் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உண்மையான பக்தர்கள் திராவிட மாடல் அரசின் ஆன்மீக தொண்டை பாராட்டுகின்றனர். நான் காவடி எடிப்பது போலவும், அமைச்சர்கள் அலகு குத்திக்கொண்டு தரையில் உருளுவது போலவும் நேற்று ஒரு வாரப் பத்திர்க்கையில் கார்ட்டூன் வெளியிட்டு இருக்கிறார்கள். அதை பார்க்கும்போதும் எனக்கு சிரிப்பு வரல, ரொம்ப பரிதாபமாக இருந்துச்சு. பக்திதான் நோக்கம் என்றால் நம் ஆன்மீகத்திற்குன் செய்தவற்றை பட்டியலிட்டு பாராட்டியிருக்கலாம். பல ஆண்டுகால வன்மத்தின் வெளிப்பாடாகத்தான் இப்படிப்பட்ட கார்ட்டூன்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்களுடைய ஆதரவற்ற அவதூறுகளைப் பற்றி எனக்கு ஒரு போது கவலை இல்லை. இவையெல்லாம் எனக்கு கவலை இல்லை.. இவைதான் எனக்கு ஊக்கம், உற்சாகம். இன்னும் நீங்கள் எங்களை கேலி செய்யுங்கள்; விமர்சனம் செய்யுங்கள்.. நான் அதைப்பற்றியெல்லாம் கவலை பட தயாராக இல்லை. எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் மக்கள் பணி தொடரும். திருநாவுக்கரசர் மொழி போல என் கடன் பணிசெய்து கிடப்பதே. என்னுடைய பணி மக்கள் பணி அதை அறிந்து நான் செயல்படுவேன். நாம் தொடர்ந்து உண்மையான பக்தர்களின் நலனுக்காக செயல்படுவோம் என்று தெரிவித்தார்.

## தாராபுரத்தில், மாவட்ட அளவிலான தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் நிர்வாகிகளுக்கு போரடியில் தமிழ்நாடு டிஜிட்டல் உறுப்பினர்கள் சேர்க்கை பயிற்சிக்கூடம்

மூலனூர், ஜூலை 03




தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் & காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவினர்களுக்கு & நிர்வாகிகள் BLA2 மற்றும் BDA உறுப்பினர்களுக்கு ஓரணியில் தமிழ்நாடு டிஜிட்டல் முகவர்கள் உறுப்பினர் சேர்க்கை பயிற்சி கூட்டம் திருப்பூர் மாவட்டம் மூலனூர் ஊராட்சிக்கு உட்பட்ட வடுகபட்டி சாலையில் லெட்சுமி மஹாலில் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர் திருமதி. கயல்விழி அவர்களுடன் திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் மற்றும் தொகுதி பார்வையாளர் கணேஷ், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் திமுக செயலாளர்கள் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் வார்டு கிளை கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப பிரிவினர் முக்கிய நிர்வாகிகள் BLA2 மற்றும் BDA உறுப்பினர்கள் கலந்து கொண்டு.. ஓரணியில் தமிழ்நாடு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் ஊழியர்கள் வரும் 9 ம் தேதி தர்ணா போராட்டம்




7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ் மாக் ஊழியர்கள் வரும் 9 ம் தேதி தர்ணா போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். வரும் ஜூலை 9 ஆம் தேதி தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கம் சட்டமன்றத்தின் முன்பு 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அதன் சிறப்புத் தலைவர் கு.பாரதி தலைமையில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட உள்ளன. இதில் தேர்தல் 10 ஆண்டுகள் பணிபுரிந்த தற்காலிக ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். டாஸ்மாக் ஊழியர்களுக்கு நிலை ஆணையை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். சட்டமன்றத்தில் அறிவித்த ரூ.2000 ஊதிய உயர்வை உடனே வழங்க வேண்டும். தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட டாஸ்மாக் ஊழியர்களுக்கு காலதாமதமின்றி மீண்டும் பணி வழங்க வேண்டும். காலி பாட்டில்களை திரும்பப்பெறும் திட்டத்தில் டாஸ்மாக் ஊழியர்கள் மீது பணி சுமையை சுமத்தாமல் மாற்று வழியில் நடைமுறைப்படுத்த வேண்டும். டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இலக்கு நிர்ணயித்து ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதை நிறுத்த வேண்டும். டிஜிட்டல் பண பரிவர்த்தனையை நடைமுறைப்படுத்த ஏதுவாக கடைகளின் கட்டமைப்பையும் ஊழியர்கள் பற்றாக்குறையும் சரி செய்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட உள்ளன.

## பட்டாசு ஆலை விபத்து; கூடுதல் இழப்பீடு கோரி போராடினால் மிரட்டுவதா? டி.டி.வி.தினகரன்

சென்னை, ஜூலை 3



அ.ம.மு.க பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

சிவகாசியில் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கூடுதல் இழப்பீடு வழங்க கோரி போராடிய பொதுமக்களை விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மிரட்டும் தொனியில் பேசிய வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன. சிவகாசி சுற்றுவட்டாரப்பகுதிகளில் அடிக்கடி அரங்கேறும் பட்டாசு ஆலை விபத்துகளையும், அதன் மூலம் பறிபோகும் அப்பாவி உயிர்களையும் தடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காத மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் உரிய நிவாரணம் வழங்கக்கோரி போராடும் பாதிக்கப்பட்ட மக்கள் மீது காவல்துறையின் மூலம் அடக்குமுறையை ஏவியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சட்டம் ஒழுங்கை பேணிக்காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையின் உயர் அதிகாரி ஒருவரே, பொதுமக்களை பார்த்து "ஒழுங்காக இருந்துக்கோ இல்லைனா வேறு மாதிரி ஆகிவிடும்" என மிரட்டும் தொனியில் பேசியிருப்பது தமிழகத்தில் சமூக விரோதிகள் மட்டுமல்ல காவல்துறையினரையும் பார்த்து பொதுமக்கள் அச்சப்படும் சூழலை ஏற்படுத்தியுள்ளது.

தங்களுடைய பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்திடும் என நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையை காப்பாற்றிடும் வகையில் காவல்துறை செயல்பட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தி 24 மணிநேரம்கூட ஆகாதநிலையில், காவல்கண்காணிப்பாளர் ஒருவரே பொதுமக்களை மிரட்டும் தொனியில் பேசியிருப்பது காவல்துறை யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது? என்ற கேள்வியை எழுப்புகிறது. எனவே, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி அவர்களுக்கு உரிய இழப்பீடை வழங்கிட வேண்டும் எனவும், பொதுமக்களை காக்க வேண்டிய காவல்துறையினர் தங்களது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயல்பட தேவையான அறிவுரையை வழங்கிட வேண்டும் எனவும் முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்களைவலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஓரணியில் தமிழ்நாடு என்ற கொள்கையில் இணைய வேண்டும்: அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி



திண்டுக்கல், ஜூலை 3

திண்டுக்கல் மாவட்ட திமுக அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பத்திரிகையாளர் சந்திப்பு,, ,,, திண்டுக்கல் மாவட்ட திமுக அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது அவர் அளித்த பேட்டியில்,

புதிய குறிக்கோளை நோக்கி வருங்காலத்தில் தமிழகத்தை ஆபத்திலிருந்துகாக்கும் ஒரே நோக்கத்தில் மண் மொழி கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும். ஒற்றைத் தமிழ்நாடு என்ற ஒரே கோஷத்தை உருவாக்கி தமிழகமே விழித்து கொண்டிருக்கிறது.

ஓரணியில் தமிழ்நாடு என்பது பல்வேறு சூழ்நிலை அடக்கிய ஒரு புதிய குறிக்கோள். கற்றறிந்தவர்களை புரிந்து கொள்வதற்கு அதில் எவ்வளவு பொருள் இருக்கிறது என்பதை அறிவார்கள். ஆகவே அனைத்து தமிழர்களும் ஓரணியில் தமிழ்நாடு என்ற கொள்கையில் இணைய வேண்டும்.

கல்விக்கான நிதியை மத்திய அரசு நிறுத்திவிட்டது. தமிழ்நாட்டில் வரும் வரிப்பகிர்வை மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது ஆனால் நமக்கு வர வேண்டிய நிதி வரவில்லை. வருவாய் அடிப்படையில் கொடுக்காமல் மக்கள் தொகை அடிப்படையில் கொடுத்து வருகிறார்கள். எந்த வருவாயும் வழங்காத மாநிலங்களுக்கு நமது வருவாய் வழங்குகிறார்கள். சிறப்பு நிதி என்ற பெயரில் மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிறது. எப்படியும் அவர்களது பாசிச கொள்கை ஆன ஹிந்தி வரவேண்டும் என்பதை மறைமுகமாக திணிக்க பார்க்கிறார்கள்.

நிதியே தராவிட்டாலும் இரு மொழி கொள்கைதான் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என தமிழக முதல்வர் உறுதியாக உள்ளார். இலக்கணம் இலக்கியம் உள்ள தமிழ் மொழியை நாம் பாதுகாக்க வேண்டும். கடந்த காலங்களில் கருணாநிதி, அண்ணா ஆகியோர் எப்படி தமிழ் மொழியை காப்பாற்றினார்களோ. அப்படியே நாம் காக்க வேண்டும். பொருநை நதி வரலாறு, கீழடி வரலாறு ஆகியவற்றை அழிக்கும் நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

அதே போல் அரசியலிலும் நியமிக்கப்பட்ட கவர்னரை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை வஞ்சித்து

வருகிறது. தமிழ் கலாச்சாரம் மொழி பண்பாடு ஆகியவற்றை அழிக்க நினைக்கிறார்கள். இதைத்தான் மக்களிடையே எடுத்துச் சொல்ல வேண்டும் ஓரணியில் தமிழ்நாடு என்ற கொள்கையில் திரளவேண்டும்

அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என வரும் 2026 தேர்தலில் பெரிதாக எதிரொலிக்கும் என கூறி வருகின்றனர் அது குறித்து கேள்விக்கு, சட்டமன்றத்தில் முதல்வர் தெளிவாக பதில் அளித்துள்ளார் மேலும் பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார். நிறைவேற்றவில்லை என்பது உண்மைக்கு மாறானது. எல்லா கோரிக்கையும் நிறைவேற்றி விட்டார். பழைய ஓய்வூதிய திட்டத்திற்கும் புதிய ஓய்வு திட்டத்திற்கும் மாறுதல் கேட்கிறார்கள். அது சம்பந்தமாக முதல்வர் முடிவு செய்து அறிவிப்பார் என பதில் அளித்தார்.

# அஜித் குமார் படுகொலை நீதி கேட்டு அதிமுக சார்பில் ஓசூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஓசூர், ஜூலை 3

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடத்துப்புரத்தை சேர்ந்தவர் அஜித் குமார் 27 வயதானவர் அங்கு உள்ள பத்ரகாளியம்மன் கோவிலில் தனியார் நிறுவன ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தவர் இவரை ஜூன். 27ஆம் தேதி அன்று திருட்டு வழக்கு தொடர்பாக மானாமதுரை உட்கோட்ட தனிப்படை போலீசார் அழைத்துச் சென்றனர் போலீசார் தாக்கியதில் ஜூன் 28ஆம் தேதி அன்று அஜித்குமார் உயிரிழந்தார் இதனிடையே இச்சம்பவம் குறித்து திருப்புவனம் போலீசார் பி என் எல் எஸ் 190 (2) ஏ பிரிவின் கீழ் வழக்கு பதிந்து நீதித்துறைக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது இதனிடையே தனிப்படை காவலர்கள் பிரபு கண்ணன் சங்கர மணிகண்டன் ராஜா ஆனந்த் ராமச்சந்திரன் ஆகிய ஆறு பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் பணியிடை நீக்கம் செய்தர் இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றம் செய்து உத்திரவிட வேண்டுமென அதிமுக சார்பில் தமிழக முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்தது அதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கிழக்கு பகுதி செயலாளர் ராஜ் தலைமையில் ராயக்கோட்டை சாலையில் கைகளில் பதகைகள் கைகளில் ஏந்தியவாறு தமிழக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டு இறந்த




அஜித்குமாருக்கு நீதி கிடைக்க வேண்டுமென கண்டன ஆர்ப்பாட்டம் பதிவு செய்தனர். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தி எம்,ஜி,ஆர், மன்ற மாவட்ட துணைச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் ஜே,பி .,என்கிற ஜெயபிரகாஷ். குபேரன் என்கிற சங்கர் மாமன்ற உறுப்பினர். கும்மி என்கிற ஹேமகுமார், மாமன்ற உறுப்பினர். ஷில்பா சிவக்குமார் மாமன்ற உறுப்பினர். ஜக்கு. சூடப்பன் மஞ்சு ஆதி, சந்திரன், சக்கரவர்த்தி செல்வம் அச்சு, விஜய், தனபால், மாதையன், வேணு கோபால், மற்றும், ஓசூர், மாநகர கிழக்கு பகுதி மற்றும் தெற்க்கு பகுதியில் வாசுதேவன் தலைமையில் அதிமுக பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை பதிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது... கும்கி என்கிற ஹேமகுமார். நன்றியுரை தெரிவித்தார்

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் தாராபுரத்தில் 35 மணமக்கள் ஜோடிகளுக்கு திருமணம்

தாராபுரம், ஜூலை 3

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், ஏழை எளிய 35 மணமக்களுக்கு தாராபுரத்தில் திருமணம் செய்து வைக்கப்பட்டு சீர்வரிசை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் அறிவித்தவாறு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அறிவுரையின்படி, திருப்பூர் மாவட்டம், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், தாராபுரத்தில் உள்ள அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் 35 ஜோடி மணமக்களுக்கு இலவச திருமணம் செய்து வைக்கப்பட்டது. இந்தத் திருமண நிகழ்ச்சியில் ஒவ்வொரு மணமக்கள் ஜோடிக்கும் 4 கிராம் தங்கத் தாலி, கட்டில், மெத்தை, தலையணை, போர்வை, பீரோ, மிக்சி, கிரைண்டர், மளிகை பொருட்கள், கைகடிகாரம்



மற்றும் சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட சீர்வரிசை பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறையின் திருப்பூர் மாவட்ட இணை ஆணையர் ரத்தினவேல்பாண்டியன், நகை சரிப்பார்ப்பு துணை ஆணையர் ஹர்ஷினி, திருப்பூர் மாவட்ட திமுக செயலாளர் இல.பத்மநாபன், நகரச் செயலாளர் முருகானந்தம், நகர மன்ற தலைவர் பாப்புகண்ணன், கோயில் தக்கார் ரத்தினாம்பாள், செயல் அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லையப்பர் கோவில் தேரோட்டத்தன்று 4வது ஆண்டாக பக்தர்களுக்கு அன்னதானம்: நிர்வாகிகள் பேட்டி

நெல்லை, ஜூலை 3

நெல்லை டவுனில் லிட்டில் பிளவர் பள்ளியில் இன்று மாலை காந்திமதி அம்பாள் பக்தர் பேரவை நிர்வாகிகள் காசி விஸ்வநாதன், சிதம்பரம் சீனிவாசன், ஹிந்து ஆலய பாதுகாப்பு குழு குணசீலன், பரமசிவன், லிட்டில் ஃப்ளவர் பள்ளி தாளாளர் மரிய சூசை ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர் அப்போது அவர்கள் கூறியதாவது ஹிந்து ஆலய பாதுகாப்பு



இயக்கம் அருள்மிகு நெல்லையப்பர் அருள் தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் கிளை கமிட்டி மற்றும் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் கைங்கரிய டிரஸ்ட் சார்பில் ஆணி பெரும் திருவிழா திருதேரோட்டம் அன்று 4வது ஆண்டாக மகா அன்னதானம் நடைபெறுகிறது.

வரும் 8ம் தேதி அன்று தேரோட்ட தினத்தில் பெருங்குளம் செங்கோல் ஆதீனம் 103வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீ லசரி சிவபிரகாசா சத்யஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் டவுன் லிட்டில் பிளவர் பள்ளியில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை அன்னதானம் 75 ஆயிரம் பேருக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம் பக்தர்கள் அன்னதானத்தில் கலந்து கொள்ள வேண்டும், இவ்வாறு தெரிவித்தனர்.

# சாகர் சர்வதேசப்பள்ளி மாணவர் பேரவைப் பதவியேற்பு விழா

ஈரோடு, ஜூலை 3

சாகர் சர்வதேசப்பள்ளியில்2025 26 ஆம்ஆண்டிற்கான மாணவர் பேரவைப் பதவியேற்பு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா கடவுள் வாழ்த்துடன் தொடங்கியது. இவ்விழாவிற்குசாகர்ஸ்போர்ட்ஸ்அகாடமியின்சிறப்பு பயிற்சியாளர்உயர்திருஇராமன்விஜயன்அவர்கள்சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும் பள்ளியின் தாளாளர் திரு. அரிமா.சி.சௌந்திரராஜன், முதல்வர் திருமதி.சீஜா, ஆசிரியர்கள், மாணவர்கள்மற்றும்பெற்றோர்கள்ஆகியோர்திரளாகக்கலந்துகொண்டனர்.

இவ்விழாவில்மாணவர் பேரவையின் தலைவி,



ரம்யரூபா அவர்கள் ,வரவேற்புரைஆற்றினார். பிறகு மாணவர் பேரவையின் தலைவர் மற்றும்தலைவி, விளையாட்டு அணிகளின் தலைவர்மற்றும்உபதலைவர்கள் ஆகியோருக்கு பள்ளியின் தாளாளர், பள்ளி முதல்வர் மற்றும்சிறப்புவிருந்தினர் ஆகியோர்பதவிப்பிரமாணம்செய்துவைத்தனர்..

இதில் தலைவர்களுக்கான அடையாள வில்லைகளும் கொடிகளும்வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர்மாணவர் பேரவையின்தலைவர்களுக்கும்உறுப்பினர்களுக்கும்வாழ்த்துகள் கூறினார். அவர்தனது சிறப்புரையில்மாணவர்களிடம்தலைமைப்பண்புவளரவேண்டும். பிறமாணவர்களுக்கும்எடுத்துக்காட்டாகஇருக்கவேண்டும்என்றும்ஒருசெயலைச்செய்யதைரியம்வேண்டும்எனவும் கூறிமாணவர்களைஊக்கப்படுத்தினார்.

அடுத்ததாக பள்ளியின்தாளாளர்திரு. அரிமா.சி.சௌந்திரராஜன்உரையாற்றும்போதுமாணவர்கள்தங்கள்தலைமைப்பண்பைவளர்த்துக்கொள்ளக்கூடியசரியானஇடம்பள்ளியேஎன்றும், படிப்பைத்தவிரமற்றவர்களுக்கு உதவும்குணம்நம்மிடம்எப்பொழுதும்இருக்கவேண்டும்எனவும்அதற்கானதகுதியை ,மாணவர்கள்வளர்த்துக்கொள்ளவேண்டும்எனவும்கூறினார்.

பள்ளியின் முன்னாள்மாணவர்தலைவிமித்ராநன்றியுரைகூறகாலை 10.45அளவில்விழாதேசியகீதத்துடன்இனிதேநிறைவடைந்தது.

# நத்தம் திமுக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்

நத்தம்,ஜூலை 3

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை செயல் விளக்க கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் எம்எல்ஏ ஆண்டி அம்பலம் தலைமை தாங்கினார்.


திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினகுமார், பழனிச்சாமி, நத்தம் பேரூர் மன்ற தலைவர் சேக் சிக்கந்தர் பாட்சா, நகர



செயலாளர் ராஜ்மோகன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் செயல்முறை, வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்ட் உறுப்பினர் சேர்க்கை குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் மாநில பொதுக் குழு உறுப்பினர் முத்துகுமாரசாமி, நத்தம் தொகுதி மேற்பார்வையாளர் ரஞ்சன்துறை, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜகோபால், மாணவரணி துணை அமைப்பாளர் சிவா, நகர இளைஞரணி அமைப்பாளர் சேக் சிக்கந்தர் தாரிக், உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய திமுக கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் வனக்கோட்டம் சார்பில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கோடை கால இயற்கை முகாம்

கரூரில் மாவட்ட கால நிலை மாற்ற இயக்கம் மற்றும் கரூர் வனக் கோட்டம் சார்பில் பத்து அரசுப்பள்ளிகளை சேர்ந்த நூறு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் கோடை கால சிறப்பு இயற்கை முகாம் வனத்துறை மூலம் 01.07.2025 அன்று நடத்தப்பட்டது. இதில் மாணவர்களும், ஆசிரியர்களும் கடவூர் தேவாங்கு சரணாலயம், பொன்னனியார் அணை, நம்மாழ்வார் உயிர்ச்சூழல் நடுவம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப் பட்டனர். இதில் மாணவர்களுக்கு காடுகள் பாதுகாப்பு, உயிர்பன்மயம், இயற்கை வேளாண்மை, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவை குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இதில் மாணவர்களுக்கு வினாடி வினா போட்டி, ஓவியம் வரைதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பாடல்கள் பாடுதல் உள்ளிட்ட செயல்பாடுகள் நடத்தப்பட்டன. வெற்றி



மாணவ மாணவியருக்கு பரிசுகளும், பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும், முகாம் உபகரணங்கள் அடங்கிய தொகுப்பும் வழங்கப்பட்டன. இதில் மாவட்ட வன அலுவலர் சண்முகம், வனச்சரக அலுவலர் சிவக்குமார், வனவர் கோபிநாத், முதலமைச்சரின் பசுமை தோழர் கோபால், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் வேலுசாமி, வனத்துறை களப் பணியாளர்கள், அரசுப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவமாணவியர் கலந்துகொண்டனர்.

# மேட்டுப்பாளையம் ரோட்டரி பிரைம் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

மேட்டுப்பாளையம், ஜூலை 3

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் ரோட்டரி பிரைம் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா அன்னூர் ரோடு லட்சுமி பேலஸில் நடைபெற்றது விழாவிற்கு தலைவர் டாக்டர் சுகன்யா அரவிந்த் தலைமை தாங்கினார் செயலாளர் எஸ் கணேஷ் செயலர் அறிக்கை வாசித்தார் புதிய தலைவர் கணேசுக்கு தலைவர் சுகன்யா காலர் அணிவித்து பொறுப்புகளை ஒப்படைத்தார் செயலாளர் கணேஷ் புதிய செயலாளர் தியாகராஜனிடம் பொறுப்புகளை ஒப்படைத்தார் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் பதவி ஏற்றனர்.

புதிதாக சேர்ந்த 10 உறுப்பினர்களுக்கு ரோட்டரி உதவி ஆளுனர் கமலேஷ் கட்டாரியா பதவி பிரமாணம் செய்து வைத்தார் சிறப்பு விருந்தினர் மாவட்ட ஆளுநர்( தேர்வு) விஜய சந்திரன் சிறப்புரை ஆற்றினார் விழாவில் காரமடை ரோட்டரி சங்கம் முன்னாள் தலைவர் ஞானசேகரன், மேட்டுப்பாளையம் ரோட்டரி சங்கத்தின் என். எஸ் வி. ஆறுமுகம், மண்டல ஒருங்கிணைப்பாளர் டாக்டர் அரவிந்த் கார்த்திகேயன், சிவ சதீஷ்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். மேட்டுப்பாளையம் காரமடை சிறுமுகை, ஊட்டி கோத்தகிரி திருப்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து ரோட்டரி சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள்




கலந்து கொண்டனர் மேட்டுப்பாளையம் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் ஹோட்டல் உரிமையாளர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழாவில் 75 வயது பாபு என்பவர் கோவை ஈஎஸ்ஐ மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு தன்னுடைய உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளார். அவருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் மேட்டுப்பாளையம் மணி நகர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அனார்கலி, மனநலம் குன்றிய பெண்களுக்கு ஆதரவளித்து வரும் ஹெல்பிங் ஹார்ட்ஸ் சேவை அமைப்பினர், பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அளித்து வரும் சிஸ்டர் ஞனரத்தினம் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது மேலும் கோத்தகிரி பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து வரும் மலைவாழ் மாணவர்கள் இரண்டு பேருக்கு கல்வி கட்டணம் வழங்கப்பட்டது குழந்தைகள் மையத்துக்கு குக்கர் வழங்கப்பட்டது முடிவில் செயலாளர் தியாகராஜன் நன்றி கூறினார்

# செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் மதுரை சகோதயா பள்ளிகள் காம்ப்ளக்ஸ் செஸ் டோர்னமெண்ட்

காரைக்குடி, ஜூலை 3

செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் மதுரை சகோ தயா பள்ளிகள் காம்ப்ளக்ஸ் செஸ் டோர்னமெண்ட் 2025 (மண்டலம் 5), 01.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணி அளவில் தொடங்கப்பட்டு செஸ் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

சிவகங்கை புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய 8 பிரிவுகளில்




கலந்து கொண்டு விளையாடினர். இதில் செட்டிநாடு பப்ளிக் பள்ளி மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்று ஓவர் ஆல் சாம்பியன் பட்டத்தை வென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் முதல்வர் உஷா குமாரி சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கினார். துணை முதல்வர் பிரேம சித்ரா நன்றியுரை வழங்கினார்.

# தஞ்சையில் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா



தஞ்சாவூர், ஜூலை.3

தஞ்சை மருத்துவக்கல்லூரி சாலை கந்தசரஸ் திருமண மண்டபத்தில் பார்க்கவகுல மூப்பனார் (சுருதிமார்) சமூக நல அமைப்பு மற்றும் பார்க்கவகுல சுருதிமார் கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை இணைந்து 3வது ஆண்டு மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் வழிகாட்டுதல் விழா நடத்தியது. விழாவிற்கு அறக்கட்டளை உறுப்பினரும் அமைப்பின் மூத்த தலைவருமான ரகுபதி மூப்பனார் தலைமை தாங்கினார். அறக்கட்டளை இணைச் செயலாளர் புத்தர் வரவேற்றார். அறக்கட்டளை துணைத் தலைவர் ஆனந்தசிங் தலைவரை முன்மொழிந்தார். அறக்கட்டளை உறுப்பினர் மனோகரன் வழிமொழிந்தார். அறக்கட்டளை செயலாளர் என்ஜினீயர் இராஜேந்திரன் ஆண்டறிக்கை வாசித்தார். அறக்கட்டளை பொருளாளர் குமரன் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். அறக்கட்டளை தலைவர் சந்திரசேகரன் விளக்க உரை ஆற்றினார். அறக்கட்டளை உறுப்பினர்களும் தொழில் அதிபர்களுமான சேகர், டாக்டர் கதிர் கணேசன் மூப்பனார் தமிழக காவல்துறை தலைவர் (ஓய்வு) ஸ்ரீதர் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் (ஓய்வு) செல்வம் ஓய்வு பெற்ற காவல் கண்காணிப்பாளர் ஜெயராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் சிறப்பு விருந்தினராக சுரேஷ் மூப்பனார் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பேசினார். முடிவில் விப்ரோ திட்ட மேலாளர் ராமநாதன் நன்றி கூறினார். பிற்பகல் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் பேராசிரியர், மாணவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. முடிவில் அறக்கட்டளை உறுப்பினர் சிவனேசன் நன்றி கூறினார்.

# இனியும் பொறுக்க முடியாது... வன்னியர் இட ஒதுக்கீடு குறித்து அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 3

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு வழங்கப்பட்டு, நான்காவது முறையாக நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவரும் 11ம் தேதியுடன் நிறைவடையவுள்ளது. வெறும் 3 மாதங்கள் மட்டுமே வழங்கப்பட்ட காலக்கெடு 30 மாதங்களாக நீட்டிக்கப்பட்டும் கூட, ஆக்கப்பூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது வன்னிய மக்கள் மீது திமுக அரசு எந்த அளவுக்கு வன்மத்தைக் குவித்து வைத்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான திசையில் ஓர் அடியைக் கூட திமுக அரசும், பிற்படுத்தப்பட்டோர் ஆணையமும் எடுத்து வைக்கவில்லை. முதலில் தரவுகளைத் திரட்ட மனித வளம் இல்லை என்று கூறி, பரிந்துரை அளிப்பதை தாமதப்படுத்திய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், இப்போது சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்கள் இருந்தால் மட்டும் தான் அதனடிப்படையில் வன்னியர்களுக்கான பிரதிநிதித்துவத்தை தீர்மானிக்க முடியும் என்று முரண்டு பிடிக்கிறது.

பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களின் பணியே சமூகநீதியை நிலைநாட்டுவது தான். சட்டநாதன், அம்பாசங்கர், நீதியரசர் ஜனார்த்தனன் ஆகியோர் தலைமையிலான ஆணையங்கள் அதைத் தான் செய்தன. ஆனால், இப்போதுள்ள ஆணையம், திமுக அரசின் கைப்பாவையாக மாறி சமூகநீதியை படுகொலை செய்து கொண்டிருக்கிறது. இதற்காக ஆணையம் வெட்கித்தலை குனிய வேண்டும்.

வன்னியர்களுக்கான உள் இட ஒதுக்கீடு குறித்து 3 மாதங்களில் அளிக்க வேண்டிய அறிக்கையை 30 மாதங்களாகியும் அளிக்க முடியவில்லை என்றால், பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வேறு என்ன தான் செய்து கொண்டிருக்கிறது?. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பில் வன்னியர்களின் சமூக பின்தங்கிய நிலை குறித்த தரவுகளைத் திரட்டி, அதனடிப்படையில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று தான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தி, அதனடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. அவ்வாறு இருக்கும் போது பரிந்துரை அளிக்க ஆணையம் தயங்குவது ஏன்?.

ஒருவேளை சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி தான் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றால், அதற்காக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் அதிகாரம் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு இருக்கும் நிலையில், அதை செய்யாமல் ஆணையம் தாமதிப்பது ஏன்? என்பன உள்ளிட்ட வினாக்களை பாமக. பல முறை எழுப்பியும் திராவிட மாடல் அரசு எந்த பதிலும் அளிக்காமல் பேசா மடந்தையாக அமைதி காத்து வருகிறது. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தலைமைச் செயலகத்திற்கு 100 முறைக்கு மேல் பாட்டாளி மக்கள் கட்சியின் பிரதிநிதிகள் படையெடுத்திருக்கின்றனர். இது தொடர்பாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை மூன்று முறையும், பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவரை ஒரு முறையும் நான் சந்தித்து பேசியுள்ளேன். மருத்துவர் அய்யா அவர்கள் வன்னியர் இட ஒதுக்கீடு குறித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பத்துக்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதியது மட்டுமின்றி, பல முறை தொலைபேசி வாயிலாகவும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஒருகட்டத்தில் முதலமைச்சரை அவர் நேரில் சந்தித்தும் வலியுறுத்தியுள்ளார். இவ்வளவுக்குப் பிறகும் வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்க தி.மு.க. அரசு மறுக்கிறது என்றால், அது வன்னியர்களுக்கு எதிராக எவ்வளவு வன்மங்களையும், வஞ்சனைகளையும் சுமந்து கொண்டிருக்கிறது என்பதை உணர முடியும். இந்த சமூக அநீதியை இனியும் பொறுக்க முடியாது. தமிழ்நாட்டின் சமூகநீதி வரலாற்றில் எந்த ஒரு இட ஒதுக்கீடு குறித்து முடிவெடுக்கவும் இவ்வளவு அதிக கால அவகாசத்தை பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்கள் எடுத்துக் கொண்டதில்லை. சமூகநீதியைக் காப்பதாகக் கூறிக் கொள்ளும் மு.க.ஸ்டாலின் அரசு தான் 30 நாள்களில் வழங்கப்பட வேண்டிய சமூக நீதியை 30 மாதங்களுக்கு மேலாகியும் வழங்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. சமூகநீதிக்கு எதிரான இந்த பாவச் செயலுக்கு திராவிட மாடல் அரசு பரிகாரம் தேடுவதற்கான தருணம் வந்து விட்டது. வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து பரிந்துரைப்பதற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு வழங்கப்பட்ட காலக்கெடு வரும் 11ம் தேதியுடன் நிறைவடையவிருக்கும் நிலையில், இனியும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதால், வன்னியர்களின் சமூக, கல்வி பின்தங்கிய நிலை குறித்த தரவுகளின் அடிப்படையில் வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடமிருந்து அடுத்த 10 நாட்களுக்குள் பரிந்துரை அறிக்கையை தமிழக அரசு பெற வேண்டும். அதனடிப்படையில், சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி வன்னியர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அருண்ராஜ் சார்பில் ஜி எச் இல் நோயாளிகளுக்கு பெட்ஷீட் வழங்கப்பட்டது



சேலம், ஜூலை 3

சேலம் மாவட்டம் சேலத்தில் தமிழக வெற்றி கழக கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக பொறுப்பேற்று அருண்ராஜ் சேலம் வந்தார்.

இதனையடுத்து தமிழக வெற்றிக் கழக சேலம் மாநகர மாவட்ட செயலாளர் பார்த்திபன் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனை அடுத்து சேலத்தில் உள்ள தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு ஒரு லட்சம் மதிப்புள்ள பெட்ஷீட்களை சேலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று இலவசமாக வழங்கினார் அரசு மருத்துவமனை. பிரியா பெற்றுகொண்டார்.

இதன் பின்னர் அருண்ராஜ் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர்கூறியதாவது, தந்தை பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் போன்ற கொள்கை தலைவர்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும், எனது சொந்த ஊர் சேலம். முதன்முறையாக பொறுப்பேற்று சேலம் வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

என்னை வழி நடத்திய ஆசிரியர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் தளபதியின் இரும்பு கோட்டையாக மாறும்.

சேலம் மாவட்டத்தில் மழை பெய்தால் பொதுமக்கள் பெரிதும் சிரமம் அடைகிறார்கள். தொழில் வளர்ச்சி அடையவில்லை .கடந்த ஆட்சியாளர்கள் இதற்கு முக்கியத்துவம் தரவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சேலம் மாவட்டம் தலைசிறந்த மாவட்டமாக மாறும்.வருகிற நான்காம் தேதி செயற்குழு கூடுகிறது அன்று தலைவர் விரிவாக பேசுவார். பரந்தூரில் விமான நிலைய பிரச்சனையின் போது மக்களை சந்தித்தார். மதுரையில் மக்களை சந்தித்தார் தற்போது இறுதி கட்ட படபிடிப்பு முடிந்து இருக்கிறது. விரைவில் வருவார். பொதுமக்களுக்காக அவர் அமைதியாக உள்ளார் என்றார், மேலும் கூட்டணி குறித்து அவரிடம் கேட்டதற்கு, கூட்டணி பற்றி தெளிவாக தலைவர் கூறிவிட்டார் .எங்களது தலைமையை ஏற்போர் கூட்டணியில் சேர்த்துக் கொள்வோம். எங்களது தலைவர் ஏற்கனவே சொன்னது போல் அரசியல் எதிரி ,கொள்கை எதிரி இவர்களை தவிர யார் வேண்டுமானாலும் எங்களுடன் கூட்டணிக்கு வரலாம் என்று கூறினார்.

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் முகாம்



சென்னை, ஜூலை 3

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொது மக்களின் 34 புகார் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண் சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 34 புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இம்முகாமின் போது சென்னை பெருநகர காவல், துணை ஆணையாளர் (நிர்வாகம்) சுப்புலட்சுமி, உடன் இருந்தார்.

# நாமக்கல் :அரசு பள்ளி சுகாதார பணி நிதி 9 மாதங்களாக தரவில்லை புகார்: எம்.பி.நேரில் ஆய்வு



நாமக்கல் ஜீலை.3.

அரசு பள்ளிகளில் கழிவறை உள்ளீட்ட சுகாதார பணிகளுக்கு அரசு மாதந்தோறும் ரூ3000 வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உள்ள பல அரசு பள்ளிகளுக்கு கடந்த 9 மாதங்களாக மேற்படி நிதி வராததை அறிந்த கொ.ம.தே.க.கட்சியை சேர்ந்த வி.எஸ். மாதேஸ்வரன் எம்.பி.நேரில் சென்று ஆய்வு செய்து நிதி விரைந்து கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டார்

.அரசு பள்ளிகளில் கழிவறை உள்ளிட்ட சுகாதாரப் பணிகளை மேம்படுத்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் மாதம் 3000 வழங்கும் திட்டத்தில் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உள்ள பல பள்ளிகளுக்கு நிதி கடந்த 9 மாதங்களாக வரவில்லை என்று புகார் வந்ததை அடுத்து நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி.அவர்கள் நேரில் ஆய்வு செய்து வட்டார வளர்ச்சி அலுவலரை இது குறித்து கேட்டறிந்தார். மேலும் இது குறித்து திட்ட இயக்குனரிடமும் தொலைபேசியில் கேட்டறிந்து உடனடியாக பள்ளிகளுக்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு வலியுறுத்தினார். மேலும் பொறியாளர் மாதேஸ்வரன், அலுவலக உதவியாளர் முருகேசன் அவர்களுக்கு பணி நிறைவு நாளினை முன்னிட்டு நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட விவசாய அணி செயலாளரும் திசா கமிட்டி உறுப்பினருமான ரவிச்சந்திரன், நாமக்கல் தெற்கு மாவட்ட பொருளாளர் சசிகுமார், தெற்கு மாவட்ட இணை செயலாளர் சீனிவாசன், நாமக்கல் தெற்கு மாவட்ட சேந்தமங்கலம் இளைஞரணி துணைச் செயலாளர் கொங்கு வேலு, சேந்தமங்கலம் ஒன்றிய செயலாளர் சுந்தர் ராஜ், நகர செயலாளர் பஞ்சாப் ரவி, நகர இளைஞரணி செயலாளர் லோகேஷ் ராஜா உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக சங்கு ஊதி எழுப்பும் போராட்டம்



ஈரோடு, ஜூலை 3

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக மத்தியில் ஆளும் பாசிச பாஜக மோடி அரசின் கீழ் செயல்படும் ரயில்வே நிர்வாகத்தின் திடீர் கட்டண உயர்வை கண்டித்தும் நீண்ட நாட்களாக கோரிக்கைகளை நிறைவேற்றாததை கண்டித்தும் தூங்கிக் கொண்டிருக்கும் ரயில்வே நிர்வாகத்தை சங்கு ஊதி எழுப்பும் போராட்டம் 02/07/2025 புதன்கிழமை காலை 10 :30 மணிக்கு ஈரோடு காளை மாட்டு சிலை அருகில் உள்ள சிம்னி ஹோட்டல் எதிரில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.திருச்செல்வம் தலைமையில் மண்டல தலைவர்களான ஆர்.விஜயபாஸ்கர்,எச்.எம். ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா வரவேற்பு உரை நிகழ்த்தினார்.

கடந்த நான்காண்டுகளாக ரயில்வே நிர்வாகம் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி தராமல் காலம் கடத்திக் கொண்டு மெத்தன போக்கில் உள்ள தூங்குகிற ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து சங்கு ஊதி எழுப்பும் போராட்டத்தை முன்னாள் மாவட்ட தலைவரும் மாமன்ற உறுப்பினருமான ஈ.பி.ரவி சங்கு ஊதி துவக்கி வைத்தார் முன்னாள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினரான ஆர் எம் பழனிசாமி கண்டன உரையை துவக்கி வைத்து ரயில்வே நிர்வாகம் கடந்த பல ஆண்டு காலமாக நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை தொடர்ந்து மெத்தனப் போக்கில் இருந்தால் விரைவில் ஈரோடு ரயில் நிலையத்தை முற்றுகையிடும் போராட்டமாக நடத்தப்படும் என எச்சரிக்கை செய்து கண்டன உரையாற்றினார்*.

* இந்நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்களான எ.மாரியப்பன், எல் பி பாலசுப்ரமணியம், எம் எஸ் ஞானதீபம், முன்னாள் வட்டார தலைவர்களான எம் செல்வராஜ், நசியனூர் நடராஜ், மாவட்டத் துணைத் தலைவர் கே புனிதன் மாவட்ட பொதுச் செயலாளர்களான இரா கனகராஜன், டி கண்ணப்பன்,

மாவட்ட செயலாளர் மாமரத்து பாளையம் கோபி, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் எஸ் பிரபு, ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் சங்கு நகர் சதாம் உசேன், மாவட்ட சேவாதளம் தலைவர் எஸ் முகமது யூசுப், ஐ என் டி யு சி நிர்வாகி வின் கண்ணன்,என் சி டபிள்யூ சி மாவட்ட தலைவி ஆர் கிருஷ்ணவேணி, மாவட்ட நிர்வாகிகளான டி என்.சீனிவாசன்,முன்னாள் மாமன்ற உறுப்பினர் சூரம்பட்டி சாம்ராட் அசோக், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை சுப்பிரமணி, சங்கு நகர் ஆட்டோ அப்துல் காதர், ராஜா,ஜாவித், அக்பர், பெரியார் நகர் சுராஜ்,கேமரா செல்வம்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரசன்னா, ஆர்என் புதூர் பெருமாள் மணி, மகிளா காங்கிரஸ் நிர்வாகிகளான சோபியா, கோமதி, சரோஜினி, பிரபாகரி, கலைச்செல்வி, தேன்மொழி, ஜெனிபர் மாவட்ட நிர்வாகிகள் வி பி ரவி, கிருஷ்ணம்பாளையம் ரவி, ஈ எம் சிராஜுதீன், குளம் சபீர் அகமது, ராஜாஜிபுரம் பி குமரேசன், டீக்கடை லோகு, வள்ளிபுரத்தான் பாளையம் எஸ் தங்கவேலு, சூரம்பட்டி சுரேஷ், வாட்டர் சிவாஜி மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு கண்டன கோசங்களை எழுப்பினார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவில் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி.மாரிமுத்து நன்றி உரையாற்றினார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் லயன்ஸ் சர்வதேச பள்ளியில் தேசிய மருத்துவர் தின கொண்டாட்டம்




ஸ்ரீவில்லிபுத்தூர் ஜூலை 3

ஸ்ரீவில்லிபுத்தூர் லயன்ஸ் சர்வதேச பள்ளியில் தேசிய மருத்துவ தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பள்ளித் தாளாளர் ஆர் வெங்கடாசலபதி தலைமை வகித்தார். பள்ளி இயக்குனர் எஸ். கோபாலகிருஷ்ணன் முதல்வர் எஸ். சிவகுமார் துணை முதல்வர் பாண்டீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் விஜூ ஆண்டோ பிரபு கிரேஸ் மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர். பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளி முதல்வர் அனைவரும் வரவேற்று மருத்துவ தினம் பற்றி எடுத்துரைத்தார்

சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு உடல் நலம் பற்றியும் உணவு பழக்க வழக்கம் பற்றியும் எடுத்துக் கூறினர். விழாவில் பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சாதனை மாணவன் ச. அஸ்வினுக்கு பாராட்டு



கோவை, ஜூலை 3

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10_ வகுப்பு படிக்கும் மாணவன் ச. அஸ்வின் கோவை மாவட்ட அளவில் நடைபெற்ற நீளம் தாண்டுதல் போட்டியில் ட்ரிபிள் ஜம்ப் 11.6 மேட்டர் தாண்டி சாதனை படைத்ததை பாராட்டி உயர்திரு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன் குமார் கிரியப்பனவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

உடற்கல்வி ஆசிரியரியை கோ. காமாட்சி, துணைத் தலைவர் டாக்டர் மா. சிவக்குமார் உறுப்பினர் ச. சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
3.7.2025

## புழலில் ஒரே குடும்பத்தில் தந்தை, 2 மகன்கள் பரிதாப சாவு: ஜெனரேட்டர் புகை காரணமா?



சென்னை ஜூலை 3

புழல் அடுத்த கதிர்வேடு பிரிட்டானியா நகரை சேர்ந்தவர் செல்வராஜ் (வயது 57). இவர் லாரி டிரான்ஸ்போர்ட் முன்பதிவு அலுவலகம் நடத்தி வந்தார். இரவது மனைவி மாலா. இவர்களது மகன்கள் சுமன்ராஜ்(15), கோகுல்ராஜ்(13), மகள் இதயா. இவர்களில் சுமன்ராஜ் அருகில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பும், கோகுல்ராஜ் 9ம் வகுப்பும் படித்து வந்தனர்.

நேற்று இரவு செல்வராஜ் குடும்பத்துடன் சாப்பிட்டார். பின்னர் அனைவரும் தூங்க சென்றனர். செல்வராஜூம் அவரது மகன்கள் சுமன்ராஜ், கோகுல்ராஜ் ஆகியோர் தனி அறையிலும், மாலாவும் அவரது மகள் இதயாவும் மற்றொரு அறையிலும் தூங்கினர். இன்று காலை நீண்ட நேரம் ஆகியும் செல்வராஜூம் அவரது 2 மகன்களும் இருந்த அறையின் கதவு திறக்கப்படவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த மாலா அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தார். அங்கு கணவர் செல்வராஜ் மற்றும் மகன்கள் சுமன்ராஜ், கோகுல்ராஜ் ஆகியோர் வாயில் நுரை தள்ளிய நிலையில் இறந்து கிடந்தனர்.

இதுகுறித்து புழல் போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் ரஜினிகாந்த் மற்றும் போலீசார் விரைந்து வந்து 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசுஆஸ்பத்திரிக்குஅனுப்பிவைத்தனர். செல்வராஜூம் அவரது மகன்களும் பிணமாககிடந்தஅறையில்ஜெனரேட்டர் புகை இருந்தது. நேற்று இரவு 2 மணியளவில் அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டு உள்ளது. இதையடுத்து செல்வராஜ் வீட்டில் உள்ள ஜெனரேட்டரை இயக்கி உள்ளார். அதில் இருந்து வெளியேறிய புகை அறைக்குள் பரவி உள்ளது. எனவே அவர்கள் இந்த புகையால் இறந்து இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

இறந்து போன 3 பேரின் வாயிலும் நுரை தள்ளி இருந்ததால் அவர்கள் விஷம் குடித்து தற்கொலை செய்து இருப்பதாக முதலில் தகவல் வெளியானது. அவர்கள் இறப்புக்கான காரணம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

செல்வராஜின் மனைவியும், மகளும் மற்றொரு அறையில் தூங்கியதால் அவர்கள் உயிர் தப்பினர். கணவர் மற்றும் 2 மகன்களின் உடல்களை பார்த்து மாலா கதறி அழுதது பரிதாபமாக இருந்தது. இதுகுறித்து போலீசாரிடம் கேட்டபோது செல்வராஜ் மற்றும் அவரது 2 மகன்களின் பிரேத பரிசோதை அறிக்கைக்கு பின்னரே அவர்கள் எப்படி இறந்தனர் என்பது தெரியவரும். அதனை வைத்து அடுத்த கட்டவிசாரணைநடத்தப்படும்என்றனர். ஒரேகுடும்பத்தில் 3 பேர் இறந்த சம்பவம் உறவினர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## போலீசார் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்: எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் அறிவுரை



தூத்துக்குடி ஜூலை 3

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று மெஞ்ஞானபுரம் காவல் நிலையத்தில் வருடாந்திர ஆய்வு மேற்கொண்டுகாவல்நிலையபோலீசாரின்உடைமைகளை (Kit Inspection) பார்வையிட்டும், அங்கு பராமரிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் முக்கிய வழக்கு கோப்புகளை பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.

மேலும் மேற்சொன்ன காவல் நிலைய போலீசாரிடம், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், புகார் அளிக்க வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ளவேண்டும்எனவும்,புகார்மனுபதிவுசெய்ததற்கான வரவேற்பு சீட்டை (Reception Slip) வரவேற்பாளர் மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார். இந்த நிகழ்வின் போது சாத்தான்குளம் உட்கோட்டடி.எஸ்.பி.சுபகுமார்உட்படகாவல்துறையினர் உடனிருந்தனர்.

## இன்றைய ராசி பலன்கள் (3.7.2025)

மேஷம்: உழைப்பிற்கு TODAY நல்ல பரிசு கிடைக்கும். வேலை வாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

ரிஷபம்: நிதி நிலை சீராகும். பழைய கடன்கள் தீர்க்கப்படும். வீட்டில் சிலசின்னசிக்கல்கள்இருந்தாலும் நீடிக்காது.

மிதுனம்: புதிய முயற்சியில் வெற்றி. வியாபாரத்தில் லாபம். பழைய நண்பரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

கடகம்: உடல் ஆரோக்கியத்தில் சிறு கவலை. மன அழுத்தம் இருக்கும். ஆனாலும் குடும்ப ஆதரவு கிடைக்கும்.

சிம்மம்: வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

கன்னி: அறிவுக் கூர்மை அதிகரிக்கும். போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கு சாதகமான நாள். உணவில் கவனம் தேவை.

துலாம்: வீட்டு வேலைகளில் பிஸியாக இருப்பீர்கள். உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். வீண் சண்டைகளை தவிர்க்கவும்.

விருச்சிகம்: சிறந்த வாய்ப்பு காத்திருக்கிறது. தொழிலில் லாபம். பழைய சிக்கல்கள் தீரும். நண்பர்களுடன் சந்தோஷமான சந்திப்பு.

தனுசு: புதிய திட்டங்களை தொடங்க நல்ல நேரம். மனைவி/கணவருடன் நேரம் செலவிடுவதால் உறவு மேம்படும்.

மகரம்: செயல்களில் சீரும் சுகமும் இருக்கும். நிலம் தொடர்பான விஷயங்களில் சாதகமான தீர்வு. பண வரவு உயரும்.

கும்பம்: சிறு சிக்கல்கள் இருந்தாலும், நீங்கள் புத்திசாலித்தனமாக தீர்வுகளை காண்பீர்கள். நண்பர்களிடம்உதவிகிடைக்கும்.

மீனம்: இனிமையான நாள். கல்யாணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். பயணம் ஒருவேளை ஏற்படலாம்.

## திருப்புவனம் அஜித்குமார் வீட்டிற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய தவெக தலைவர் விஜய்



சிவகங்கை ஜூலை 3

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம்கோவில்காவலாளி அஜித்குமார். இவர் தனது நகைகளை திருடிவிடதாக நிகிதா என்ற பெண் போலீசில் புகார் அளித்தார். புகார் தொடர்பாக அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது அஜித்குமாரை போலீசார் கடுமையாக தாக்கினர். இந்த தாக்குதலில் அஜித்குமார் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் தாக்குதல் நடத்திய போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், போலீசாரால் அடித்துக்கொல்லப்பட்ட திருப்புவனம் அஜித்குமார் வீட்டிற்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நேரில் சென்றார். வீட்டில் வைக்கப்பட்டிருந்த அஜித்குமார் புகைப்படத்திற்கு விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், அஜித்குமாரின் குடும்பத்தினரை சந்தித்து விஜய் ஆறுதல் கூறினார்.

## திருப்புவனம் சம்பவம் எதிரொலி: சிறப்பு தனிப்படைகள் கலைப்பு: போலீஸ் டி.ஜி.பி. அதிரடி



சென்னை ஜூலை 3

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் போலீஸ் நிலைய எல்லையில்உள்ளமடப்புரம்கோவில் காவலாளி அஜித்குமார் திருட்டு வழக்கு ஒன்றில் சிறப்பு தனிப்படை போலீசாரால் அடித்து கொலை செய்யப்பட்டு உள்ளார். இந்தசம்பவம்தமிழகம்முழுவதும்கடும்அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. 5 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்த வழக்கு தற்போது சி.பி.ஐ. போலீஸ் விசாரணைக்கு மாற்றப்பட்டு உள்ளது. இந்தநிலையில், டி.ஜி.பி. சங்கர் ஜிவால் போலீஸ் அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை மூலம் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

அந்த உத்தரவில், 'அதிகாரிகளின் கீழ் தேவையில்லாமல் செயல்படும் சிறப்பு தனிப்படைகளை உடனடியாக கலைத்துவிட வேண்டும். தேவைப்பட்டால் சிறப்பு புலனாய்வுக்காக உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று, தனிப்படைகளை அமைத்து கொள்ளலாம். தற்போது, கலைக்கப்படும் சிறப்பு தனிப்படைகளில் பணியாற்றும் போலீசார் வழக்கமான பணிகளுக்கு உடனடியாக மாற்றப்பட வேண்டும்' என்று, கூறப்பட்டுள்ளது.

## கம்பம் பஸ் ஸ்டாண்டில் குடிமகன்களுக்காக பயன்படும் பாதுகாப்பான இருக்கைகள்



கம்பம், ஜூலை. 3

தேனி மாவட்டம் தமிழக, கேரளா எல்லை பகுதியாக உள்ள கம்பம் நகரில் இருந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் சர்வதேச சுற்றுலா தலமாக உள்ள தேக்கடி மற்றும் சுருளி அருவிக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் இங்கு வந்து தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே இங்கு தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் இங்கு வரும் பயணிகள் வசதிக்காக நகராட்சி சார்பில் ரூ. 1.75 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பயணிகள் அமர்வதற்காக பஸ் நிலையத்தில் தெற்கு பக்கத்தில் 48 இருக்கைகளும், வடக்கு பக்கத்தில் 22 இருக்கைகளும் அமைக்கப்பட்டு உள்ளது. இதை பயணிகள் பயன்படுத்த முடியாத நிலையில் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள டாஸ்மாக் மதுபானக்கடையில் மது அருந்தும் குடிமகன்கள் அரைகுறை ஆடையுடன் இங்குள்ள இருக்கைகள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டு உள்ளதால் படுத்து உறங்குகின்றனர். ஆகவே கை குழந்தைகளுடன் வரும் பெண்கள் பெரிதும் சிரமம் அடைந்து வருகின்றனர். ஆகவே நகராட்சி நிர்வாகமும், போலீசாரும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

## அந்த காட்சியில் நடிக்கும்போது என்னை அறியாமல் என் உடல் நடுங்கியது நடிகர் ஜெய்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான ஜெய், தற்போது பாபு விஜய் தயாரித்து இயக்கியுள்ள 'சட்டென்று மாறுது வானிலை' என்ற படத்தில் நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக மீனாட்சி கோவிந்தராஜன் நடித்திருக்கிறார். யோகிபாபு, 'கருடா' ராம், ஸ்ரீமன் ஆகியோரும் நடித்துள்ளனர்.

ரொமான்டிக் திரில்லர் படமாக உருவாகி வரும் இதில், 'லாக்அப்'பில் போலீசிடம் ஜெய் அடிவாங்கும் புகைப்படம் வெளியாகி வைரலாகி வருகிறது. போலீசிடம் ஜெய் மாட்டிக்கொண்டதாகவும் இணையத்தில் தகவல்கள் வேகமாக பரவியது.

இதுகுறித்து ஜெய் கூறும்போது, ''புதிய படத்தின் 'ஸ்டில்'கள் வெளியாகி வைரலாகி வருகிறது. இந்த படத்தில் நான் நடித்தபோது அடைந்த பதற்றம் இதுவரை எனக்கு வந்தது கிடையாது. காவல் நிலையத்தில் போலீசாரிடம் அடிவாங்கும் காட்சிகளில் என்னை அறியாமல் உடல் நடுங்கியது.

இன்றைய சமூகத்தில் நடக்கும் மிக முக்கிய பிரச்சினையை மையப்படுத்தி கதை உருவாகிறது. பொதுவாக மனதை தாக்கும் கதைகளில் நடிக்க எனக்கு பிடிக்கும். அதன்படி தான் என் படங்களும் அமைந்து வருகின்றன'', என்றார்.

## 2வது டெஸ்ட்: டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சு தேர்வு



இந்தியகிரிக்கெட்அணிஇங்கிலாந்தில்சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 01 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது.

இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் இன்று தொடங்குகிறது. இதையொட்டி இரு அணியினரும் சில தினங்களாக தீவிர பயிற்சியினை மேற்கொண்டு வந்தனர். இந்த போட்டியில் பும்ரா ஆடுவதில் சந்தேகம் நிலவுகிறது. இந்நிலையில், இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாசில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்துள்ளது.

## அஜித்தின் ஏகே 64 பட அப்டேட்



அஜித்குமார் நடிப்பில் கடந்த ஏப்ரல் 10ம் தேதி வெளியான படம் 'குட் பேட் அக்லி'. இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கிய இப்படத்தில் திரிஷா, அர்ஜுன் தாஸ், சுனில், பிரசன்னா, பிரியா வாரியர் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்திருந்தனர். ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிட்ட இப்படம் அஜித் ரசிகர்களை கடந்தும் வரவேற்பை பெற்றது. பெரிதும் எதிர்பார்ப்பில் வெளிவந்த இப்படம் மக்களிடையே மாபெரும் வரவேற்பை பெற்று பிளாக் பஸ்டர் வெற்றியடைந்தது.

அஜித்தின் சினிமா கேரியரிலேயே அதிக வசூலை அள்ளிய சாதனையை குட் பேட் அக்லி திரைப்படம் படைத்தது. மேலும் 'குட் பேட் அக்லி' படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் 'ஏகே 64' படத்தை ஆதிக் ரவிச்சந்திரன்தான் இயக்கப் போகிறார் என்று ஹிண்ட் கொடுத்திருந்தார்.

அதன்படி, ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் 'ஏகே 64' நடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. இதற்கிடையில் கார் பந்தயங்களில் கவனம் செலுத்தி வரும் அஜித், 2025 அக்டோபர் மாதம் வரை சினிமாவிலிருந்து பிரேக் எடுத்திருப்பதாக ஏற்கனவே கூறியிருந்தார்.

இந்நிலையில், அஜித்தின் 'ஏகே 64' படத்தின் அப்டேட் கிடைத்துள்ளது. அதாவது, 'ஏகே 64' படத்தினை ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க உள்ளதாகவும், இந்த படத்திற்கான அறிவிப்பு இந்த மாத இறுதியில் வெளியாக உள்ளதாகவும் என தகவல் கிடைத்துள்ளது.

## 2வது டெஸ்ட் போட்டி: பும்ரா, குல்தீப் இடம் பெறாதது ஏன்..? சுப்மன் கில் பதில்



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 01 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது.

இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் இன்று தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து இந்திய அணி பேட்டிங் செய்து வருகிறது. இந்த போட்டிக்கான இந்திய அணியில் 3 மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்படி, சாய் சுதர்சன், ஷர்துல் தாக்கூர், ஜஸ்ப்ரீத் பும்ரா நீக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர், ஆகாஷ் தீப், நிதிஷ் குமார் ரெட்டி இடம் பிடித்தனர். இந்த போட்டிக்கான இந்திய அணியில் குல்தீப் யாதவ்இடம்பெறுவார்எனஎதிர்பார்க்கப்பட்டது..ஆனால்அவருக்கும்வாய்ப்புவழங்கப்படவில்லை.

இந்நிலையில், இந்த போட்டியில் பும்ரா, குல்தீப் யாதவ் இடம் பெறாதது ஏன் என்பது குறித்து கேப்டன்கில் பதில் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, நாங்களும் முதலில் பவுலிங் செய்யவே தீர்மானித்திருப்போம். இந்த பிட்ச்சில் ஏதேனும் சவால் இருந்தால் அது முதல் நாளாக இருக்கும். எங்களுடைய அணியில் 3 மாற்றங்கள் செய்கிறோம்.

நிதிஷ் ரெட்டி, சுந்தர், ஆகாஷ்தீப் ஆகியோர் வருகிறார்கள். பணிச்சுமையை நிர்வகிக்கும் பொருட்டு பும்ரா விளையாடவில்லை. அடுத்தப் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது. அங்கே அவரை நாங்கள் அதிகம் பயன்படுத்துவோம் என்று நினைக்கிறோம். இந்தப் போட்டிக்கு முன்பாக நல்ல இடைவெளி கிடைத்தது. இது எங்களுக்கு முக்கியமான போட்டி. குல்தீப் யாதவை விளையாட வைக்க ஆர்வமாக இருக்கிறோம். ஆனால் கடந்தப் போட்டியை பார்க்கும் போது எங்களுடைய லோயர் ஆர்டர் நன்றாக விளையாடவில்லை.

எனவே பேட்டிங் வரிசையை பலப்படுத்த முடிவெடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

## "விஜயகாந்துக்கு அடுத்து விமல்தான்" இயக்குனர் ஆர்.வி.உதயகுமார்



எழில் இயக்கி விமல் நடித்த 'தேசிங்குராஜா' படம் கடந்த 2013ம் ஆண்டில் வெளியாகி வெற்றி பெற்றது. இதன் இரண்டாம் பாகம் 12 ஆண்டுகளுக்கு பிறகு 'தேசிங்குராஜா2' என்ற பெயரில் உருவாகி இருக்கிறது. ஆர்.வி.உதயகுமார், ரவி மரியா, சிங்கம்புலி, நாஞ்சில் பி.சி. அன்பழகன் உள்பட முன்னணி டைரக்டர்கள் பலரும் நடித்துள்ளனர். படம் விரைவில் ரிலீசுக்கு வருகிறது.

சென்னையில் நடந்த பட விழாவில் இயக்குனர் ஆர்.வி.உதயகுமார் பேசுகையில், "விமலை பற்றி யார் என்னவேண்டும் என்றாலும் சொல்லலாம். ஆனால் என்னை பொறுத்தவரை, நல்ல மனிதர். எப்போது போன் போட்டாலும் உடனே எடுத்து நிதானம் மற்றும் தெளிவுடன் பேசக்கூடியவர்.

நான், செல்வமணி போன்றோர் படங்கள் இயக்கிய காலங்களில் இருந்த ஹீரோக்களை விமல் மட்டும்தான் தற்போது பிரதிபலிக்கிறார். இன்னும் சொல்லப்போனால் விஜயகாந்துக்கு அடுத்து அனைவரிடமும் வெள்ளந்தி பேச்சால் ஈர்க்கக்கூடியவர், விமல். ஹீரோ என்ற தலைக்கனம் அவரது பேச்சில் இருக்கவே இருக்காது. பந்தா இல்லாத நடிகர்களில் விமல் முதன்மையானவர். எல்லாவற்றையும் அரவணைத்து போகக்கூடிய மனப்பான்மை கொண்ட விமலுக்கு தோல்வி என்பது கிடையாது. இனி வரும் காலம் அவருக்கு ஜெயமாக அமையும்'' என்றார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.